**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009**
**Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

# நடார் மஹானின் வாழ்க்கைச் செய்தி

(அல்லூர் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. ஏ.எஸ்.வெங்கட்ராமபட்டாச்சாரியார்)

## நடார் மஹான் ...... சில நினைவலைகள்

நடார் மஹான் ஓர் சகாப்தமாக வாழ்வாங்கு வாழ்ந்தவர். ஓர் நிறை மனிதராக தன் வாழ்க்கையை ஓர் கர்மயோகியாய் வாழ்ந்து காட்டியவர். அவர் எனக்கு ஜேஷ்ட மாதாமஹர். அவருக்கு நான் பிரியமான தௌஹித்ரன் என்ற முறையில் அவருடன் தொடர்பு கொண்ட காலகட்டங்களை உரிமையோடு நினைவு கூர்கின்றேன். பெரியோர்கள் குணங்களை க்ரஹித்துக் கொண்டு குற்றங்களை கனிவோடு விலக்கி வருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இளமைக்காலம் இவருடைய இளமைக்காலம் மிகவும் கடினமானதென்று அவர் சொல்ல கேட்டிருக்கிறேன். சிறிய வயதிலே தந்தையாரை இழந்தவர். தாயாரோடும், பிதாமஹியோடும், தனது சகோதரர் வரதராஜன் அவர்களோடும் (திரு. உ. கி வரதராஜயஜ்வா அடியேனுடைய மாதாமஹர்). நடார் என்னும் கிராமத்தில் வசித்து வந்தனர்.

பெருமாள் கைங்கர்யங்களோடு, ஆகமங்களை கற்று, தனது அறிவை வளர்த்து கொண்டவர். க்ரந்தம், தேவநாகரி, தெலுங்கு ஆகியவற்றில் புலமையை வளர்த்து கொண்டார். அமைதியானவர். குணசீலர் உரக்க பேசமாட்டார். யாரிடம் பேசினாலும் பணிவாகத்தான் பேசுவார். வித்யா வினய ஸம்பன்ன: என்றபடி வினயமானவர். கர்வமோ, தற்பெருமையோ அவரிடம் தென்படாது. தன்னை எங்கும் முன்னிறுத்திக் கொள்ளமாட்டார்.

அவருடைய தினசரி நடவடிக்கைகள் விடியற்காலை 4 மணிக்கெல்லாம் தானாகவே கண்விழித்து விடுவார். அலாறமெல்லாம் அவருக்கு அவசியமில்லை. எழுந்தவுடன் ஸ்ரீஹரி... ஸ்ரீ ஹரி... ஸ்ரீஹரி என்று உச்சரிப்பார். கோவிந்தா.. கோவிந்தா என்று கோவிந்தனை கூப்பிடுவார். பிறகு அகத்து பெருமாளை மனதால் பிரார்த்தித்துவிட்டு கொல்லையில் 'கோ சம்ரக்ஷணம்' செய்ய போய்விடுவார். காலையில் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, ஆலயத்திற்குச் செல்வார். அவருடைய அன்றாட நடவடிக்கைகள் சாஸ்த்திரத்தில் எப்படி சொல்லபட்டிருக்கிறதோ அதிருந்து துளிகூட வழுவாமல் சீராக இருக்கும் நேர மேலாண்மையை அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டும். பொழுது விடிந்து அவர் ஸ்நானம் செய்து ஒரு நாளும் நான் பார்த்ததில்லை. கடமையே என்று அனுஷ்டானங்களை செய்யமாட்டார். அதில் ஆழ்ந்த நம்பிக்கையும், சிரத்தையும் அதிகம் கொண்டு ஒவ்வொரு செயலையும் 'யக்ஞமாகத்தான் செய்வார். மகான்கள் அரிய செயல்களை மட்டும் சிறப்பாக செய்யமாட்டார்கள் சிறிய செயல்களையும் சிறப்பாகதான் செய்வார்கள். தபாலாபீசில் கட்டு பிரிப்பதற்கு முன்னதாக எல்லா கோவில் ஆராதனைத்தையும் (நடார், இரண்டாம் கட்டளை, புத்தகரம் கிராம கோவில்கள்) செய்து விடுவார். கேட்டால் சொல்வார். தபால் சுபச் செய்தியும் வரலாம், சகல செய்தியும் வரலாம். பெருமாள் ஆராதனம் நின்று போகக்கூடாதல்லவா என்பார். கும்பகோணம் வட்டத்தில் பல வைகானஸ குடும்பங்களுக்கு குலகுருவாய் விளங்கியவர். மாத்யான்ஹிகம், பிரும்ம யக்ஞம், தேவரிஷி பித்ரு தர்ப்பணம். எல்லாம் முடித்து விட்டு போஜனத்தை முடித்துக்

கொண்டு, விவசாயம் பார்க்க கிளம்பி விடுவார். துளிக்கூட கண்ணயர மாட்டார். எங்கு சென்றாலும் நடைப் பயணம் தான், கையிலே ஓர் தீர்த்த பாத்ரத்தை எடுத்துகொண்டு, வெயில் தெரியாமல் இருக்க தலையிலே ஓர் முண்டாசு, காலே ஓர் பாத ரக்ஷை. வரப்புகளின் ஊடே நடந்து சென்று வயற்களம் காணச் செல்வார். 3,4 மணிக்குதான் வீடு திரும்புவார். நடை ரேழியில் உட்கார்ந்து கொண்டு விவசாய கணக்கு எழுதுவார். கொல்லைக்கு சென்று மாடுகளை கவனிப்பார். (சிறிது நேரம்) புஸ்தகங்களை வைத்து கொண்டு லயித்து கொண்டு இருப்பார்.

விடியற்காலையும், இந்த மாதப்பொழுதும் தான் எங்களை போன்ற மாணாக்கர்களுக்கு பாடம் சொல்த் தரும் நேரம். அதே நேரத்தில் வீட்டு வேலைகளை கவனிப்பார். மின்வசதி கிடையாது. அரிக்கேன் விளக்கு, பெட்ரூம் லைட், பவர் லைட் ஆகியவற்றை சுத்தம் செய்து எண்ணையூற்றி, திரியிட்டு விளக்குகளை தயார் செய்வார்.

இடையிடையே 'யேய் சீனு, வேணு (அடியேனுக்கு அவர் வைத்த பெயர் வேணு கோபாலன்) அங்கு என்ன அரட்டை என்பார். அம்மங்குடி சீனுவும், அல்லூர் வேணுவும் சேர்ந்தால் எப்ப பார்த்தாலும் பேச்சுதான். அவர் குரல் கேட்டவுடன் நாங்கள் அமைதியாய் பாடத்தை தொடருவோம்.

மாலை 5.30 மணிக்கெல்லாம் மாலை அனுஷ்டானங்களுக்கு தயாராகி விடுவார். காணாமல், கோணாமல், கண்டு கொடு, என்பதர்கேற்ப சூரியன் மாலையில் மறைவதற்குள் அர்க்யம் கொடுத்து விடுவார். ஸந்த்யாவந்தனம் முடித்த பிறகு ஒரு நாள் கூட தவறாமல் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் சிறிது நாட்டு சர்க்கரை நிவேதனம். மாலையில் பெருமாள் திருவாராதனம் பெருமாள் கோவில் நடை திருக்காப்பிட்ட பிறகு அகத்திற்கு திரும்புவார். எளிதான இரவு பலகாரம். ஊஞ்சல் அமர்வார். வேணு இங்கே வா இன்றைக்கு என்ன படித்தாய்... சொல்லு என்பார் சோதனை ஆரம்பமாகும் பிரும்ம யக்ஞம், தேவரிஷி பித்ரு தர்ப்பணம் சொல்லு என்பார். ஆகா, வசமாய் மாட்டிக் கொண்டோம். கூப்யாப்ய ஸ்வாஹா...... கூல்யாப்ய ஸ்வாஹா.... விகர்யாப்ய ஸ்வாஹா...... கூப்யாப்ய ஸ்வாஹா.... நமக்கு அதை விட்டு தாண்டாது மத்யானம் சீனுவோடு சளசளன்று பேச்சு......... படிச்சுருக்கலாமோல்யோ சீனு நாளைக்கு வரட்டும் என்பார். சீனுவிற்கு (சிங்கப்பூர் சீனிவாஸ பெருமாள் கோயில் தலைமை அர்ச்சகர் சாக்ஷாத் அம்மன்குடி சீனுதான்). நாளைக்கு இருக்கு கச்சேரி என்று நமக்கு ஓர் அல்ப சந்தோஷம். ஆனால் சீனு சுதாரிப்பில் மன்னன். அவர் என்ன கேட்பார் என்று சீனுவிற்கு முன்னமே தெரியும். சமாளித்து விடுவார்.

இடையே ஸ்ரீஒப்பியப்பன் சன்னதி பிருஹஸ்பதி கைங்கர்யமும் இருந்து வந்ததால் உத்ஸவ நாட்கள், பிரார்த்தனை உத்ஸவங்கள் உள்ள நாட்களில் நடார் கிராமத்திருந்து உ. கோவில் (சுமார் 5கி.மீ. தூரம்) நடந்தே வந்து பெருமாளுக்கு கைங்கர்யம் செய்வார்.

இரவு எத்தனை மணியானாலும் நித்திரைக்கு செல்வதற்கு முன்னால் அன்றைய வரவு-செலவு கணக்கை கட்டாயம் எழுதிவிடுவார். பகவத் ஸ்மரணையோடு அன்றைய தினம் பூர்த்தியாகும்.

உழைப்பு, சோம்பன்மை, நேர மேலாண்மை, பகவத் பக்தி ஆசார அனுஷ்டானங்கள் ஆகியவற்றிற்கு அவரே ஒரு எடுத்துக்காட்டு.

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

பித்ரு யக்ஞத்தில் அவருடைய ஈடுபாடு

சிரார்த்தம் வர இருக்கிறதென்றால் 1 வாரத்திற்கு முன்னதாகவே தயாராகி விடுவார். சம்பாரங்கள், ஸ்வாமிகளுக்கு ஆஹ்வானம், திரவ்யங்கள் தயார் செய்து என்று சுறுசுறுப்பாக செயல்படுவார். இதை பார்த்து அவருடைய சகோதரர் ஸ்ரீ.உ.கி.யஜ்வா விளையாட்டாக சொல்வார். ''சிரார்த்தம் வந்துடுத்துன்னா ராஜத்துக்கு (நடார்மஹான்) பால்யம் திரும்பிடும். என்னமா ஓடறான் பாரு இந்த வயதிலும் என்பார். சிரார்த்த தினத்தில் ஸ்தாலீபசனம், ஸ்தண்டிலத்திற்கு அருகிலேயே தானே அன்னத்தை பக்வம் செய்வார். ஸ்வாமிகளுக்கு அந்த அன்னம்தான் பரிமாறப்படும். குதப காலத்தில்தான் சிரார்த்தம் நடைபெறும் தனது ப்ரஹ்மோபதேசத்திருந்து தனது நிறைவுக் காலம் வரை வயது முதிர்ந்த போதும், அசக்தமாக இருந்தாலும் இந்த கிரமங்களிருந்து அவர் தவறியதே இல்லை. வருடத்திற்கு நான்கு சிரார்த்தங்கள். சுமார். எட்டு வயதிருந்து 84 ஆண்டு காலம் வரை பித்ரு யக்ஞம், பித்ரு தர்ப்பணங்கள் க்ஷேத்ராடனங்கள், காசி, கயா, இராமேஸ்வரம், திருப்புல்லாணி ஒவ்வொரு புண்ய காலங்களிலும் அநுசந்திப்பார். இத்தனைக்கும் அவருக்கு நினைவு தெரிந்து அவர் தகப்பனாரை பார்த்ததில்லை. 3வயது இருக்கும் பொழுதே தந்தையாரை இழந்தவர். பகவானை பித்ரு ரூபமாக உபாசித்தவர் என்று சொன்னால் மிகையாகாது.

மாத்ரு பக்தி 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்பார்கள். ஒவ்வொரு நாளும் காலை நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்து விட்டு பெருமாள் சேவிப்பதற்கு முன்னால் தாயாரை நமஸ்காரம் செய்துவிட்டுதான் மற்ற அலுவல்களை கவனிப்பார். தாயார் சொன்ன சொல்லை தட்டமாட்டார். தாயாரை வந்தனம் செய்து விட்டுதான் வெளியில் கிளம்புவார். 'மாத்ரு தேவோ பவ' உபநிஷத் வாக்யத்திற்கு உதாரணம் அவர்தான்.

ஆசார்ய தேவோ பவ, நமது ஆசார்யனிடத்தில் அபரிமிதமான பக்தி அவருக்கு உண்டு. நடார் கிராமத்திருந்து உ.கோவில் வந்து வாசம் செய்ய ஆரம்பித்த பிறகு, தினமும் காலையில் பெருமாளை (ஒப்பியப்பனை) சேவித்த பிறகு தம்முடைய ஸ்ரீவிகனசாசார்யர் சன்னதிக்கு வந்து திருவிளக்கேற்றி ஸ்தோத்ரபாடம் அனுசந்தித்து விட்டுதான் மற்ற கைங்கர்யங்களை கவனிப்பார்.

> 'அந்தணர் என்பர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுகலான்.' என்று

தமிழ் மறை சொல்வது போல எந்தவுயிர்க்கும் மனதால் கூட அவர் தீங்கு நினைத்ததில்லை. அகிம்சாவாதி, எளியவர். படாடோபம், பகட்டு இல்லாத எளிய வாழ்க்கை அவர் பிற்காலத்தில் தனவந்தராக இருந்த போதிலும் எளிய வாழ்க்கைதான். பல சிஷ்யர்களை உருவாக்கியவர். பல புஸ்தகங்கள் வெளியிட்டு இருக்கிறார். இந்த அளவு அச்சு வசதி முன்னேறாத காலத்தில் அச்சாபீஸுக்கு நடையாய் நடந்து நமது சமூஹம் முன்னேற வேண்டுமென்பதற்காக அச்சுப்பிழை திருத்தி வருடக்கணக்கில் பாடுபட்டு புஸ்தகங்களை வெளியிட்டவர். ஒவ்வொரு புஸ்தகமும் ஓர் பிரசவம் தான் எழுத்தாளனுக்கு தான் தெரியும் அதன் சிரமம்.

நடார் மஹான் ஓர் பல்கலை கழகம். அவர் ஓர் வைகானஸ ஆகம வித்வான், ஜோதிடமும் தெரியும், அவருக்கு பன்மொழி புலவர், எழுத்தாளர், வெளியீட்டாளார், பொதுஜன தொடர்பாளர், ஸர்வ ஸாதகம் ஓர் நல்ல நிர்வாகி, ஆசாரசீலர். நகைச்சுவையாய் பேசுவதிலும் வல்லவர். ஆனால் அதிகம் பேசமாட்டார். அவருடைய

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

செயல்களே பேசும். நல்ல ஆசார்யன் தனக்கென்று ஓர் சிஷ்ய பரம்பரையை உருவாக்கியவர். மனிதர்களோடு வாத்ஸல்யமாகப் பழகுபவர். கடுமையான சொல்லை சொல்லமாட்டார். உரக்க பேசமாட்டார்.

பொருளாதார ரீதியாக கஷ்டப்படுபவர்களுக்கு தானே முன்வந்து உதவி செய்வார். புறங்கூற மாட்டார். அவதூறாக பிறரைப் பற்றிப் பேசமாட்டார். 'கண்ணே மூக்கே நமஸ்காரம் கண்டதை கேட்டதை சொல்லாதே' என்று விளையாட்டாக கூறுவார். என்ன அருமையான தத்துவம். நமக்கு அனாவசியமான விஷயங்களிலும் நாம் தலையிடக்கூடாது என்பார். அவருக்கு பகைவர்களே கிடையாது. அறிவியல் விஷயங்களிலும் ஆர்வம் உண்டு. பிறரிடம் கேட்டு தெரிந்து கொள்வார்.

அவருடைய வாழ்க்கைச் செய்தி அவருடைய வாழ்க்கையே ஓர் செய்திதான். 'சத்யம் வத, தர்மம் சர' என்று நடந்து காட்டியவர் அவர் பெருமாள் திருவடி அடைவதற்கு சில மாதங்களுக்கு (1,2 மாதங்களுக்கு முன்னால் நான் உ.கோவிலுக்கு வந்து அவரை சேவித்தேன். அப்பொழுது அவருக்கு வயது 84. தள்ளாமையாக இருந்தாலும் தெளிவாக இருந்தார். அப்பொழுது என்னிடம் சொன்னார். 'இந்த கூட்டைவிட்டு ஆத்மா சீக்ரமாக ஒப்பியப்பன் திருவடியை விரைவில் அடைந்து விடும். இப்பொழுதே உன்னை ஆசிர்வதிக்கிறேன். அப்புறம் பார்கமுடியுமோ தெரியவில்லை

'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை போல்

பொருளில்லாற்கு இவ்வுலகமில்லையாங்கு' என்ற வள்ளுவன் செய்தியையே போல் இஹத்திற்கு தேவையாந லக்ஷ்மி கடாக்ஷத்தை சம்பாதித்துக்கொள். பரத்திற்கு தேவையான புண்யத்தையும் சம்பாதித்துக் கொள். தீர்காயுசாய் க்ஷேமமாய் இரு என்று ஆசீர்வதித்தார். அதுதான் அவர் எனக்கு தேஹரூபியாய் கடைசியாக ஆசீர்வாதம் செய்தது.

இரை தேடுவதோடு இறையும் தேடு' அதுதான் அவர் அளித்த செய்தி வைகானஸர்களுக்கு மட்டு மல்ல. மொத்த மனிதகுலத்திற்கே தேவையான வாழ்க்கைச் செய்தி இதுதான்.

அவர் ஓர் பல்கலை கழகம். அவரைபற்றி ஆராய்சிக் கட்டுரையே எழுதலாம். அவர் வாழ்ந்தகாலத்தில் நாம் வாழ்ந்ததே பெரும் பாக்யம் அதிலும் அவருடைய தெளிஹித்ரனாகவும், சிஷ்யனாகவும் இருக்க கிடைத்ததே எனது பாக்யம். அது எம்பெருமானுடைய அதீத க்ருபை அ்வர் ஓர் நித்ய சூரி. அவருடைய ஆசிர்வதாம் தான் தினமும் என்னை வழி நடத்திக் கொண்டு இருக்கிறது. வாழ்வளித்துக் கொண்டு இருக்கிறது.

'மஹான்கள் மறைவதில்லை துருவ நட்சத்திரமாய் பிரகாசிக்கிறார்கள் : எப்பொழுதும் லோகத்திற்கு ஒளி வழங்கி கொண்டு இருக்கிறார்கள்.

'நடார் மஹான் – ஓர் துருவ நக்ஷத்ரம்'

ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து.
ஸமஸ்த ஸன்மங்களானி சந்து.

* * *